# எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள். ( HOW YOU ARE SAVED )

*எபே 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு*

*9 ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;*

*10 ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.*

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இரட்சிக்கப்பட்ட எல்லா விசுவாசிகளும், இரட்சிப்பில் தேவன் அவர்களுக்கு கொடுத்திருக்கிற எல்லா ஆசீர்வாதங்களோடும் வாழ வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். *( சங் 35:27,3 யோவான் 2 ).* அதற்காகத்தான் அவர் தன் சொந்த மகனையே நமக்காக தந்தார் *( ரோமர் 8:32 ).* இரட்சிப்பு என்பது நரகத்துக்கு போகாமல் பூமியிலேயே ஒரு நரக வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பது அல்ல. இரட்சிப்பின் முக்கிய நோக்கம் - இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியும் இந்த பூமியிலேயே தேவனோடு அன்பாக உறவாடி நித்திய ஜீவ வாழ்க்கை வாழ்வது. *( யோவான் 3:16; யோவான் 17:3; கலா 1:4 ).* பல அருமையான விசுவாசிகள் தாங்கள் வளர்ந்த மதங்களை விட்டு, கிறிஸ்தவ சபைகளை விட்டு மிகவும் துணிவாக வெளியேறி, அதன் பிறகு சரியான அஸ்திபார அடிப்படை உபதேசங்கள் இல்லாமல், அலைக்கழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அறியாமையின் விளைவு அடிமைத்தனமும் அழிவும். *(ஏசாயா 5:13, ஓசியா 4:6).* இப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்காக அல்ல தேவன் தன் ஒரே பேறான மகனை நமக்காக தந்தது. இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் நம்முடைய வாழ்க்கையில் வீணாக்காமல் வாழுவதற்கு, இரட்சிப்பின் முழு பலன்களோடு வாழுவதற்கு, **" நீங்கள் எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள் ? "** என்பதை பற்றி நன்றாக அறிந்து கொள்வது அவசியமாகும். அந்த அறிவு நம்மை இரட்சிப்பின் முழு பலன்களோடு, தேவனுக்கு பிரியப்பட்ட, அவரோடு வாழுகிற ஒரு வாழ்வுக்கு வழிகாட்டும்.

பல விசுவாசிகளின் மத்தியில் இருக்கிற ஒரு வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால் " இன்றைய உலகின் மிகவும் புதிதான உபகரணங்களை பற்றியும், அரசியல், அவர்களது வேலை இவைகளைப்பற்றியும் மிகவும் ஆழமான அறிவு அவர்களுக்கு உண்டு. ஆனால் வேதத்தை பற்றி மிகவும் மேலோட்டமான அறிவே உண்டு ". கதை பிரசங்கங்களும், ஒரு வசனப்பிரசங்கங்களும், பாடல்களும், நகைச்சுவை பிரசங்கங்களும், திகிலூட்டும் பிரசங்கங்களுமே பலருக்கும் பிடித்தமான விஷயமாக இருக்கிறது. வேதவசனங்களை தியானிப்பது தூக்கம் வரவழைக்கிற விஷயமாக இருக்கிறது. கிறிஸ்துவின் சபையில் எல்லா வகை ஊழியங்களும் இருக்க வேண்டும். அது உண்மையே. ஆனால் **" வசனங்களை தியானிப்பது "** என்பது கிறிஸ்துவின் சபையில் மிகவும் அடிப்படையான காரியம் ஆகும்.

*அப் 17:11 அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.*
*யோசுவா 1:8, சங்கீதம் 1:2; 63:6; 119:15, 48, 78, 148; 1 தீமோ 4: 15;* போன்ற இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள **" தியானித்தல் "** என்ற வார்த்தையின் அர்த்தம் ' ஆழ்ந்து யோசித்தல், சிந்தித்தல், மனதில் அசை போடுதல், அலசிப்பார்த்தல் ' என்பதாகும். தேவனுடைய வார்த்தையை தியானிப்பது, அந்த வார்த்தையின் பின்னால் இருக்கும் தேவனை தொடர்பு கொள்ளுவது, விசுவாச வாழ்க்கையின் அஸ்திபாரம் ஆகும்.*(மத் 7:24-26).*

தேவனுடைய வார்த்தையை கேட்டு அதை மனதிலாக்காமல் இருப்பவர்களை குறித்து வேதாகமம் இவ்வாறு சொல்லுகிறது. *மத் 13:19 ஒருவன், ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்; அவனே வழியருகே விதைக்கப்பட்டவன்.*

தேவன், நம்மால் புரிய முடியாதது ஒன்றையும் நமக்கு சொல்ல மாட்டார். தேவன் தருகிற ஞானம் கடினமானது அல்ல. *யாக் 3:17 பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.*

ஆகவே சற்று மனதை ஒருமுகப்படுத்தி தேவனுடைய வார்த்தைகளை மனதிலாக்கிக்கொள்வோம்.

## ஒருவர் மறுபடியும் பிறப்பது " தேவனுடைய வார்த்தையினால் ".

ஒருவர் பௌதீகமாக உருவாவது எப்படி ஒரு தந்தையின் வித்தினால் நடைபெறுகிறதோ, அது போலவே மறுபடியும் பிறப்பதும் தேவனுடைய வசனமாகிய வித்தினால் நடை பெறுகிறது.
*1பேது 1:23 அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே.*

***யாக் 1:18*** *அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்.*
***எபே 1:13*** *நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.*
இன்று பலரிடமும், நீங்கள் எந்த வசனத்தை அல்லது வசனங்களை கேட்டு மறுபடியும் பிறந்தீர்கள் என்று கேட்டால், அதற்கு பலரும் பதில் சொல்லுவது இல்லை. இதை படிக்கும் அன்பு விசுவாசிகள் தயவாய் நீங்கள் எந்த வசனத்தை/வசனங்களை கேட்டு மறுபடியும் பிறந்தீர்கள் என்று உறுதி செய்து கொள்ளுங்கள். நல்ல இசையை, பாடலை, பிரசங்கத்தை, ஆராதனையை, அன்பான வார்த்தைகளை அல்லது நரகத்தை பற்றி மரணத்தை பற்றிய திகிலூட்டும் பேச்சுக்களை கேட்டு மறுபடியும் பிறந்தோம் என்று சொல்வது முறையானது அல்ல. ஆனாலும் கிருபை உள்ள நம் தேவன் நம் வார்த்தைகளை பார்க்காமல் இருதயத்தை பார்ப்பது அவரது கருணை.

முதலில் **நாம் எவ்வாறு இரட்சிக்கப்பட்டோம்** என்று பார்ப்போம்.

*எபே 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;*

***9*** *ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;*

நாம் எவ்வாறு ரட்சிக்கப்பட்டோம் என்ற கேள்விக்கான சரியான வேதாகம பதில் *எபே 2:8-9.* இதில் முக்கியமாக நான்கு வார்த்தைகளை நாம் காணலாம் **1. கிருபை. 2. கிரியை. 3. விசுவாசம் . 4.ஈவு.**

இந்த நான்கு வார்த்தைகளையும் பற்றி சற்று அறிந்து கொள்வது வெற்றி உள்ள இரட்சிக்கப்பட்ட வாழ்க்கைக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

## 1. கிருபை.

வேதாகம சரித்திரத்தை எடுத்து பார்க்கும்போது தேவன் மனிதனோடு ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு விதமாக உறவு வைத்திருந்ததை பார்க்கலாம். *( எபி 1:1 ).*ஆதாமும் ஏவாளும் இந்த உலகத்தை ஆளுவதற்காக, தேவனுடைய சந்தோஷத்துக்காக சிருஷ்டிக்கப்பட்டனர். ***( சங் 8:6, 115:16, (வெளி 4:11*** ஆங்கில வேதாகமம்***).*** தேவன் அவர்களோடு ஒரு நல்ல உறவு வைத்திருந்தார். மனிதன் பாவத்தில் விழுந்த போதும் தேவன் அவர்களது பாவத்துக்கு ஏற்ற விதத்தில் அவர்களை தண்டிக்க வில்லை. *( ரோமர் 5:13 )* தேவன் பாவத்தை கணக்கிடவில்லை என்றாலும் பாவம் மிகக்கொடியதே, பாவத்தின் மூலமாக சாத்தான் மனுக்குலத்தை அழித்துக்கொண்டிருந்தான். ஆகவே மனுக்குலம் பாவத்தின் கொடூரத்தை, பாவத்தின் விளைவுகளை அறிந்து கொண்டு, பாவத்தில் இருந்தும் பாவத்தின் சம்பளமாகிய மரணத்தில் இருந்தும் அவர்களை மீட்க ஒரு ரட்சகர் அவசியம் என்று அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று, தேவன் நியாயப்பிரமாணத்தை கொடுத்தார். ***( ரோம 3:19,20; 1 கொரி;15;56 ; ரோமர்;7;9; ரோம 7:12,13; கலா 3:19 ).*** இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்த போது ஒரு புது யுகத்தை, கிருபையின் யுகத்தை கொண்டு வந்தார். ***யோவா 1:17*** *எப்படியெனில் நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.* ***( 1 கொரி 1:6, ரோமர் 5:2. ).***
கிருபை என்ற சொல்லின் அர்த்தம் **" தகுதி இல்லாதவர்களுக்கு கொடுக்கப்படும் தயவு ".** உதாரணத்துக்கு நடக்க முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவருக்கு ஒரு செல்வந்தர் ஒரு அழகிய காரை கொடுக்கிறார் " . இது அந்த செல்வந்தரின் கிருபை. ஆனாலும் தேவனுடைய கிருபையை மனிதரின் கிருபையோடு ஒப்பிட்டு பார்க்க முடியாது. அந்த அளவுக்கு தேவனுடைய கிருபை மகத்தானது. தேவனுடைய கிருபையை பெற்றுக்கொள்வதற்கான ஒரே தகுதி **" எந்த வித தகுதியும் இல்லாமல் இருப்பதே ". தேவ கிருபை என்பது, " நாம் பெற்றுக்கொள்ள தகுதி இல்லாத ஒன்றை (வெகுமதியை, ஈவை) நமக்கு தருவது ". தேவ கருணை என்பது நாம் பெற்றுக்கொள்ள தகுதி உள்ள ஒன்றை ( தண்டனையை, பலனை ) நமக்கு தராமல் இருப்பது.** தேவனிடத்தில் இருந்து எதையும் பெற்றுக்கொள்ள தகுதி உள்ளவர் என்று ஒருவரும் இந்த உலகத்தில் கிடையாது. தேவன் நமக்கு தருவது எல்லாம் **" அவரது கிருபையினால் "**. தேவன் நமக்கு தராமல் இருப்பது எல்லாம் **" அவரது கருணையினால் ".** தேவனிடத்தில் போய், தேவனே உம்மிடத்தில் இருந்து இதை பெற்றுக்கொள்வதற்காக நான் இதை செய்திருக்கிறேன் என்று நமது தகுதியை காண்பிப்பது, முற்றிலுமாக தேவனுடைய கிருபையை விருதாவாக்கி விடும் ( ***கலா 2:21*** *நான் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறதில்லை; நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால், கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே.)*

**நாம் தேவனிடம் இருந்து கிருபையினால் மாத்திரம் பெற்றுக்கொள்கிற சில காரியங்களை பார்ப்போம்.**

1. இரட்சிப்பு. ***2 தீமோ 1:9, தீத்து 2:11, எபே 2:5*** *அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்*

2. நீதிகரணம். ***ரோமர் 5:16, தீத்து 3:6, ரோம 3:24*** *இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;*

3. செல்வம். *2கொரி 8:9 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.*

4. எல்லாவற்றிலும் எப்போதும் சம்பூர்ணம். *2கொரி 9:8 மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்.*

5. பிரியமாவருக்குள் தெரிந்துகொள்ளபடுதல். *எபே 1:5 பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, 6 தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்.*

6. பாவ மன்னிப்பு - மீட்பு. *எபே 1:7 அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.*

7. நித்திய ஆறுதல், நல் நம்பிக்கை. *2தெச 2:16 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும் நல்நம்பிக்கையையும் கிருபையாய் நமக்குக் கொடுத்திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும்,*

நாம் இரட்சிக்கப்பட்டதும், இரட்சிப்பில் அடங்கி இருக்கிற அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்வது கிருபையினால். பலரும் இதை ஏற்றுக்கொள்வார்கள். ஆனாலும் இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி அதன் பின் தேவனிடம் இருந்து எதையாவது பெற்றுக்கொள்ள ( உதாரணத்துக்கு - குணமடைதல், செழிப்பு, விடுதலை, ஐசுவரியம், வல்லமை ) மீண்டும் ஏதாவது " செய்ய வேண்டும் " என்று நினைக்கிறார்கள். வேதாகமம் அப்படி சொல்லுவதில்லை. நாம் எப்படி இரட்சிப்பை கிருபையினால் பெற்றுக்கொள்கிறோமோ, அது போலவே அதன் பிறகும் எல்லாம் பெற்றுக்கொள்கிறோம். நம் விசுவாச வாழ்க்கை இந்த அடிப்படையிலேயே அமைந்திருக்க வேண்டும். நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம். நாம் கிருபையினால் வாழுகிறோம்.

## 2. கிரியை. ( வேலை, செயல், செய்கை ).

ஒரு கிரியை அல்லது வேலை என்பது " எதற்காகவாவது, எதனாலாவது நாம் செய்வது ". சம்பளம் வாங்குவதற்காக வேலை செய்கிறோம். ஒருவர் நம்மிடம் அன்பாக இருப்பதனால் எதாவது வேலை செய்கிறோம்.

வேதாகமத்தில் இரண்டு முக்கியமான வசனங்களை எடுத்துக்கொள்வோம்.

*எபே 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; 9 ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;*

*யாக் 2:24 ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே.*

இவ்விரு வசனங்களையும் மேலோட்டமாக பார்க்கும்போது இவை ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது போல இருக்கும். ஆனால் உண்மையில் அப்படி அல்ல. இவ்வசனங்கள் உண்மையில் ஒன்றையொன்று தாங்கி நிரூபிக்கின்றன. இதை சரியாக மனதிலாக்கா விட்டால் விசுவாச வாழ்க்கை கடைசிவரை தோல்வியும், வருத்தமும் நிறைந்ததாகவே இருக்கும்.

வேதாகமத்தில் உண்மையில் இரண்டு விதமான கிரியைகளைப்பற்றி சொல்லப்பட்டிருக்கின்றது.

1. நியாயப்பிரமாணத்தின் கிரியைகள்; *( ரோமர் 9:32; கலா 2:16; 3:2,5,10 )* இவைகள் தேவனிடம் இருந்து எதாவது ஒரு நன்மையை பெற்றுக்கொள்வதற்காக, அல்லது தேவனை பிரியப்படுத்துவதற்காக மனிதனால் செய்யப்படுகிற, மேற்கொள்ளப்படுகிற சுய முயற்சிகள். சுய நீதிக்கிரியைகள். இதனால் வரும் நீதியை கொண்டு தேவனை பிரியப்படுத்தி விடலாம் அல்லது தேவனுக்கு பிரியமான நிலையை அடைந்து விடலாம் என்று செய்யப்படுபவை. இந்த நீதியைப்பற்றி வேதாகமம் சொல்லுவது *ஏசா 64:6 நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம்; **எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது**, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம்; எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங்களை அடித்துக்கொண்டுபோகிறது*

இக்கிரியைகளுக்கு விசுவாசம் தேவை இல்லை. இவைகள் மனிதனுடைய சொந்த திறமைகளினால், தேவனிடம் கேட்காமல், தேவனை சாராமல், தேவன் மேல் நம்பிக்கை வைக்காமல் செய்யப்படுபவை. *( கலா; 2;16, 3;12, 5;4, ரோமர்; 3;28, 4;15-16, 9; 30-32 ).* இவைகள் தேவனிடம் இருந்து எதையாவது பெற்றுக்கொள்ளலாம் என்று நாம் செய்கிற காரியங்கள். இவைகள் நல்ல மத சம்பிரதாயங்களாகவும் இருக்கலாம். இவைகள் அநேகமாக அனைத்து மதத்தவராலும் செய்யப்படுபவைகள். அனைத்து மத கோட்பாடுகளும் இந்த "கிரியைகளாலேயே மனிதனுக்கு எல்லாம் அவனது தெய்வத்திடம் இருந்து கிடைக்கும்" என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே ( சற்று வேறுபாடுகளுடன் ) இருக்கின்றன . ஆனால் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது இதில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். இன்னும் சொல்லப்போனால் மற்ற மதங்களுக்கும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் உள்ள ஒரு முக்கியமான வேறுபாடு இது. பவுல் அப்போஸ்தலன் இதை இவ்வாறாக கூறுகிறார், *"பிலி 3:9 நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை*

*உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,*

பல விசுவாசிகளுக்கும் தெரியாத உண்மை இது. நம்முடைய கிறிஸ்தவ கோட்பாடு **" கிரியைகளால் தேவனுக்கு பிரியமான நிலையை அடைய முடியாது, கிருபையினாலே மாத்திரமே ".** இதைதான் ரோமருக்கு எழுதப்பட்ட நிருபம் தெளிவாக விளக்குகிறது. இதைப்படித்துதான் மார்ட்டின் லூதர், " மனிதன் கிரியைகளால் அல்ல கிருபையினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் " என்று இருளில் தள்ளப்பட்ட சபையில் இருந்து பிரிந்து கிறிஸ்தவ மதத்தில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினார். பலரும் கொல்லப்பட்டனர், தங்கள் உயிரை கொடுத்தனர். ஆனால் இன்று பல விசுவாசிகளும் விசுவாச சபைகளும் இதை புரிந்து கொள்ளாதது சாத்தானின் ஒரு தந்திரமே.

பவுல் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைப்பற்றி சொல்லுகிற சில வசனங்களை பார்ப்போம்..

***கலா 3:10*** *நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்;.........*

*11 நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது.........*

***ரோம 3:20*** *................, எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.*

***ரோம 3:28*** *ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம்.*

**( குறிப்பு; நியாயப்பிரமாணம் என்பது என்ன, அது ஏன் கொடுக்கப்பட்டது, நாம் அதை பின்பற்ற வேண்டுமா ?, நியாயப்பிரமாணத்துக்கும் கிருபைக்கும் என்ன வேறுபாடு ? என்பது போன்ற காரியங்களை மேலும் அறிய விரும்பினால், தயவாக எமது " நாம் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல கிருபைக்கு கீழ்ப்பட்டவர்கள் " *( ரோமர் 6 14 )* என்ற வேதபாடத்தை படிக்கவும் )**

2. விசுவாசக்கிரியைகள்; இந்த கிரியைகள் விசுவாசத்தில் இருந்து பிறக்கிற கிரியைகள். நீங்கள் ஒருவேளை ஒரு கட்டிடத்துக்குள் இருக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். ஒருவர் வந்து சொல்லுகிறார் "இந்த கட்டிடத்தின் ஒரு பகுதியில் தீ பிடித்திருக்கிறது " என்று. நீங்கள் அதை நம்பினால், உடனே ஏதாவது செய்வீர்கள். ஒவ்வொருவரும் ஏதாவது செய்வார்கள். ஆனால் ஒருவர் கட்டிடத்தில் தீ பிடித்திருக்கிறது என்பதை முழுமையாக நம்பின பிறகும் ஒன்றும் செய்யாமல் இருக்கிறார் என்றால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. இதைதான் புதிய ஏற்பாடு **" விசுவாசக் கிரியைகள் "** என்று அழைக்கிறது. *( 1 தெச;1;2. 2 தெச; 1;12 ).* இவை, ஒருவர் எதை விசுவாசிக்கிறாரோ அதனோடு தொடர்புடைய, அதனால் ஊக்குவிக்கப்படுகிற கிரியைகள். இவைகள் நாம் தேவனிடம் அன்பு கூர்வதால் செய்கிறவை. நாம் ரட்சிக்கப்பட்ட நீதிமான் என்பதால் இவைகளை செய்கிறோம். நாம் நீதிமான்கள் ஆகுவதற்காக இவைகளை செய்வதில்லை, நாம் நீதிமான்கள் என்பதனால் இவைகளை செய்கிறோம். இந்த கிரியைகள் செய்வதனால் நாம் விசுவாசி ஆகுவது இல்லை, நாம் விசுவாசிகள் என்பதனால் இந்த கிரியைகளை செய்கிறோம்.

***எபே 2:10*** *ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.*

"நற்கிரியைகளை செய்வதனால் நாம் இரட்சிக்கப்படுவது இல்லை, நற்கிரியைகளை செய்வதற்காக நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்". நற்கிரியைகள் என்பது **"இரட்சிப்பின் கனி".** *( மத் 3:8 ).* ஒரு மரமானது அதன் கனியினாலேயே அறியப்படும் என்பது இயேசு சொல்லியிருக்கும் ஒரு கோட்பாடு. ( ***லூக் 6:44*** *அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும்; முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச் செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை.*). இதனால்தான் ஒரு இரட்சிக்கப்பட்ட விசுவாசியின் நடத்தை, செய்கைகள், பேச்சுக்கள் மிக முக்கியமானவையாகும். இவைகளை பார்த்தே பலரும் நம்மை, நமது தேவனை அறிந்து கொள்வார்கள். இதை இவ்வாறாக ஒருவர் சொன்னார், " வேதாகமத்தில் 4 சுவிஷேஷங்கள் உண்டு, ஆனால் பலரும் அதை படிப்பது இல்லை; பலரும் எளிதில் படிக்கிற 5 வது சுவிஷேஷம் **' இரட்சிக்கப்பட்ட நீ '** ". ஆகவே ஒரு விசுவாசிக்கு விசுவாசக்கிரியைகள் மிகவும் அவசியம். இன்னும் சொல்லப்போனால் விசுவாசக்கிரியைகள் இல்லாத விசுவாசியின் விசுவாசத்தை சந்தேகப்பட நேரிடும். ஏனென்றால், " ***யாக் 2:20*** *வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ? " ( யாக் 2:26 ).*

அன்பான சகோதரா/சகோதரி, இதில் இருந்து நீங்கள் தெளிவாக மனதிலாக்கிக்கொள்ள வேண்டும்.

*எபேசியர் 2:9* ல் சொல்லப்பட்டிருக்கும் கிரியைகள் **" நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் ".**

*யாக்கோபு 2:20,24,26* ல் சொல்லப்பட்டிருக்கும் கிரியைகள் **" விசுவாசக்கிரியைகள் ".**

இந்த அடிப்படை உபதேசம் புரியாமல் பல விசுவாசிகளும் " ஏதாவது செய்து " மாத்திரமே தேவனுடைய அன்பை சம்பாதித்துக்கொள்ள முடியும் என்று நினைத்து முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இதில் பலரும் ஓரளவு வெற்றி பெறலாம். ஆனாலும் நீங்கள் எவ்வளவுதான் நற்கிரியைகளை செய்தாலும் அதனால் நீதிமானாக முடியாது. ஏனென்றால் " எவ்வளவு நல்லவன் நீதிமான் " என்று ஒரு வரை முறை கிடையாது. ஒருவேளை

நீங்கள் உங்கள் சபையில் இருக்கும் சிலரை விட, அல்லது உங்களுக்கு தெரிந்த பலரை விட நீதிமானாக இருக்கலாம், ஆனாலும் தேவனுடைய சமூகத்தில் நிற்க தேவனைப்போல நீதி வேண்டும் *( 2 கொரி 5:21 ).* இந்த தேவனுடைய நீதியை நாம் என்ன செய்தும் சம்பாதித்துக்கொள்ள முடியாது. இது இலவசமாக இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தால் தேவன் நமக்கு கொடுப்பது. *( ரோம 3:24 இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;)* மதபோதனைகளில் நடக்கிறவர்கள் இந்த நீதியை தங்கள் கிரியைகளால் சம்பாதிக்க முயற்சி செய்வார்கள். அது நடக்காது. அதனால் பல வழிகளில் முயன்றும் எப்போதும் ஒரு தோற்றுப்போன உணர்வே இருக்கும். இப்படித்தான் பல விசுவாசிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விசுவாசிகள் புரிந்து கொள்ள வேண்டும், நீங்கள் இன்னும் எதையாவது செய்து தேவனுடைய அன்பை சம்பாதித்துக்கொள்ள முடியாது. தேவன் நாம் பாவிகளாக இருக்கும்போதே நம்மை சிநேகித்தவர், இப்போது நம்மை இன்னும் எவ்வளவு அதிகமாக சிநேக்கிறார் என்று புரிந்து கொள்ள வேண்டும்.

*ரோம 5:8 நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். 9 இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. 10 நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.*

**நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் என்பது " தேவன் நம்மேல் அன்பு கூர வேண்டும் என்பதற்காக நாம் செய்கிற செயல்கள்." விசுவாசக்கிரியைகள் என்பது " தேவன் நம்மேல் அன்பு கூர்வதனால் நாம் செய்கிற செயல்கள்."** நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் யாரும் இரட்சிக்கப்பட முடியாது. விசுவாசக்கிரியைகள் இல்லாமல் ஒருவர் இரட்சிக்கப்பட்டிருக்கிறார் என்று நம்ப முடியாது. **நம்முடைய கிரியைகளால் நாம் பாவிகள் ஆக வில்லை. ;நம்முடைய கிரியைகளால் நாம் நீதிமான் ஆகவும் முடியாது *( ரோமர் 5:19* ). நம்முடைய கிரியைகளால் நாம் இரட்சிக்கப்பட முடியாது; நம் கிரியைகளால் நாம் இரட்சிப்பை இழக்கவும் முடியாது.**

ஒரு உதாரணத்துக்கு " ஆலயத்துக்கு ஒழுங்காக செல்வதை " எடுத்துக்கொள்வோம். எந்த ஒரு மனிதனும் ஆலயத்துக்கு ஒழுங்காக செல்வதனால் இரட்சிக்கப்பட முடியாது. அப்படி முயற்சிப்பது " ஆலயத்துக்கு ஒழுங்காக செல்வதை " நியாயப்பிரமாணத்தின் கிரியை ஆக்கி விடும். ஆனால் ஒருவர் **அவர் இரட்சிக்கப்பட்டிருப்பதனால் ஆலயத்துக்கு ஒழுங்காக செல்ல வேண்டும்**. அப்படி செய்வது " ஆலயத்துக்கு ஒழுங்காக செல்வதை " விசுவாசக்கிரியை ஆக்கும்.

அன்பு சகோதர சகோதரி, தேவன் நம்மை விசுவாசக்கிரியைகள் செய்து விசுவாசியாக, அவரது பிள்ளையாக ஜீவிக்க வேண்டும் என்றே விரும்புகிறார்.

## 3. விசுவாசம்.

*எபே 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;*
விசுவாசம் என்ற வார்த்தைக்கு எளிதான விளக்கம் " தேவனுடைய கிருபைக்கு நாம் காண்பிக்கிற பதில் ".
"விசுவாசம் என்பது தேவனின் கிருபையை அடைகிற வழி... *(ரோம 5:2 அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்.)* **" விசுவாசம் என்பது ஆவிக்குரிய சக்தி "**

*ரோம 10:17 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.* நாம் இரட்சிக்கப்பட, விசுவாசம் வேண்டும். ஆனால் நம்மிடம் அந்த விசுவாசம் கூட இல்லாமல் இருந்தோம். ஆனால் தேவன் தம் அன்பினால் அந்த விசுவாசத்தையும் நமக்கு ஒரு " ஈவாக " - இலவசமாக தருகிறார். ( எபே 2:8..... *இது உங்களால் உண்டானதல்ல, தேவனுடைய ஈவு ).*

தேவ வசனம், தேவனுடைய விசுவாசத்தை கொண்டதாக இருக்கிறது. தேவ வசனம் அது சொல்லுகிறதை செய்கிற வல்லமை உடையதாக இருக்கிறது... *(ஏசா 55:11 ).* இப்படிப்பட்ட தேவ வசனத்தை நாம் கேட்கும் போது தேவனுடைய விசுவாசம் நம்மிடத்தில் வருகிறது (*ரோம 10:17 ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.* ) தேவனுடைய விசுவாசத்தை தேவனுடைய வசனத்தில் இருந்து பெற்றுக் கொள்கிறோம். இந்த விசுவாசத்தை உபயோகித்து நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

இப்படியாக கிடைக்கிற விசுவாசம் **"எல்லோருக்கும் ஒரே அளவில் ஆன விசுவாசமே"** (*ரோம 12:3. அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது; உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத்தேவன் பகிர்ந்தவிசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். Romans 12:3* .For I say, through the grace given unto me, to every man that is among you, not to think of himself more highly than he ought to think; but to think soberly, according as God hath dealt to every man ***the measure of faith.*** இங்கே ஆங்கிலத்தில் ' **the** measure of faith ' என்று இருக்கிறது. அதாவது ஒரே அளவு. ' a measure ' ஒவ்வொரு அளவு என்று இல்லை.
ஒருவேளை யாருக்கேனும் சந்தேகம் இருந்தால், 2 பேதுருவில் பேதுரு சொல்லுகிறார். *2பேது 1:1 நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நீதியால் **எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு**, இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு*

*எழுதுகிறதாவது:* அதாவது நாம் பேதுருவைப்போல் அருமையான விசுவாசத்தை பெற்றவர்கள். பேதுரு தன் விசுவாசத்தை கொண்டு செய்த அற்புதங்களையும் அடையாளங்களையும் நீங்கள் ஆறிவீர்களே. அப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

பலர் நினைப்பது போல, விசுவாசம் வருகிறதும் போவதும் இல்லை... அது நம்முடைய ஆவிக்குள், நமக்காக எப்போதும் தயாராக இருக்கிறது.. விசுவாசத்தின் அளவு மாறுவது இல்லை.... மாறுவது என்னவென்றால்

1. **நமக்கு விசுவாசம் இருக்கிறதா, இல்லையா என்கிற அறிவு...**
2. **நாம் எவ்வளவு விசுவாசத்தை உபயோகிக்கிறோம் என்பது. '**

விசுவாசம் ஒரு ஆவிக்குரிய விஷயம். ஆவிக்குரிய விஷயங்கள் ( உ.ம். அன்பு, சமாதானம், சாந்த குணம், சந்தோஷம், நம்பிக்கை ...போன்றவை ) நாம் கண்ணால் காணும், தொடும் பௌதீக விஷயங்களை போல நீள, அகல, உயர, எடை உள்ளவைகள் அல்ல( உதாரணத்துக்கு 2 கிலோ அன்பு, 1 மீட்டர் சந்தோஷம் என்பது இல்லை ). அதனால் அவை கூடுவது, குறைவது, வளர்வது இல்லை.

**வேறுபட்ட அளவில் ஆன' விசுவாசம்** என்கிற அர்த்தத்தில் பல வேத வசனங்கள் உள்ளன.

***மத் 6:30*** *அற்ப விசுவாசிகளே!* ***மத் 8:10*** *இப்படிப்பட்ட விசவாசத்தை,* ***மத் 8:26*** *அற்பவிசுவாசிகளே!* ***மத் 14:31*** *அற்பவிசுவாசியே,* ***2கொரி 10:16*** *விசுவாசம் விருத்தியாகும்போது.*

இந்த வசனங்களின் அர்த்தம் எல்லாம் **நாம் எவ்வளவு அளவு விசுவாசத்தை உபயோகிக்கிறோம்-வெளிப்படுத்துகிறோம் என்பதே..** நமக்கு எவ்வளவு விசுவாசம் இருக்கிறது என்பது அல்ல.

விசுவாசம் சம்பந்தமாக நம் வாழ்க்கையில் நடக்கிற எந்த குழப்பங்களுக்கும் நம் "விசுவாசக் குறைவு" காரணம் அல்ல- ஏனென்றால் ஒரு மிகப்பெரிய அற்புதத்தைக் கூட ஒரு சிறிய கடுகளவு விசுவாசத்தால் செய்ய முடியும். (***லூக் 17:6*** *அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.*)

குழப்பங்களுக்கு காரணம் **நமக்கு இருக்கிற விசுவாசத்தை எப்படி உபயோகிப்பது என்ற அறிவு இல்லாமையே....** இந்த அறிவு எப்படி வருகிறது என்றால் - **"வேத வசனத்தின் மூலமாய் நம் மனதை புதிதாக்குகிறதினால்".** நம் உபயோகிக்கிற விசுவாசத்தின் அளவு - வேத வசனத்தில் இருந்து நமக்கு கிடைத்திருக்கின்ற வெளிப்பாட்டின் அளவின் படியே இருக்கும். அதிக வெளிப்பாடு - அதிக விசுவாச உபயோகம்... வேத வசனத்தை அதிகமாய் தியானித்து - நம் ஆவிக்குள் இருக்கிற விசுவாசத்தை எடுத்து பிரயோகிக்கும்போது நாம் உபயோகிக்கிற விசுவாசத்தின் அளவு வளருகிறது.... (உதாரணம்: ஒரு பேட்டரி நம் ஆவி பேட்டரி... வயர்கள் - நமது மனம்.... மின்சக்தி - தேவ விசுவாசம். ஆனால் வயர்கள் பழுதுபட்டது என்றால் இந்த மின்சக்தி என்ஜினுக்கு போய் சேராது.)

நாம் வேத வசனங்களை நம்பாமல் இருந்தால் - நம்மில் இருந்து விசுவாசம் புறப்படுவதற்கு பதிலாக - நம்மில் **அவநம்பிக்கை (அவிசுவாசம்)** உருவாகி, நம் இதயங்கள் கடினப்பட்டு போகின்றன. இதை வேதம் "அவிசுவாசம் உள்ள பொல்லாத இருதயம் என்று அழைக்கிறது. (***எபி 3:12*** *சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்.)*

இந்த **அவ நம்பிக்கை** (அவ்விசுவாசம்) தான் இஸ்ரவேலரை வாக்குத்தத்த கானானுக்குள் போகாமல் தடுத்தது.***(எபி 3:18,19).*** வேத வசங்களை நம்பாமல் வருகிற அவநம்பிக்கை, வேத வசனங்களில் இருந்து நமக்கு கிடைக்க வேண்டிய மகா மேன்மையும், அருமையான - வாக்குத்தத்தங்களை - நமக்கு கிடைக்க விடாமல் செய்து விடுகிறது. இந்த அவநம்பிக்கையைதான் ( அவ்விசுவாசம், ஆங்கிலத்தில் unbelief ) இயேசு கிறிஸ்து **" இந்த ஜாதிப்பிசாசு "** என்று குறிப்பிடுகிறார்.

***மத் 17:19*** *அப்பொழுது, சீஷர்கள் இயேசுவினிடத்தில் தனித்துவந்து: அதைத் துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று கேட்டார்கள்.* ***20*** *அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்; உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.* ***21*** ***இந்த ஜாதிப் பிசாசு*** *ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார்.*

பலரும் நினைப்பது, ஒவ்வொரு ஜாதி அசுத்த ஆவியும் நம்முடைய ஒவ்வொருவிதமான கூடுதல் ஜெபத்தால், உபவாசத்தால் ஓடும் என்று. பிசாசுகள் ஓடுவது இயேசுவின் நாமத்தினால் **( இயேசுவின் நாமத்துக்கு பயந்து. )** ***( பிலி 2:10 ),*** நமது உபவாசத்தால் அல்ல. **(நமது உபவாசத்துக்கு பயந்து அல்ல).** சிறிய பிசாசுகளை விரட்ட சிறிய ஜெபமும் சிறிய உபவாசமும், பெரிய பிசாசை விரட்ட பெரிய ஜெபமும் விசுவாசமும் வேண்டும் என்பது வேதாகம விளக்கம் அல்ல. எந்த பிசாசையும் விரட்ட இயேசுவின் நாமம் போதும். ஆனால் பிசாசுகள் ஓடுவதை தடுக்கிற காரியம் நமது அவ நம்பிக்கை அல்லது அவ்விசுவாசம், unbelief. இந்த **' ஜாதிப்பிசாசைதான் '** (அவ நம்பிக்கை அல்லது அவ்விசுவாசம் ) இயேசு கிறிஸ்து, ஜெபத்தாலும் விசுவாசத்தாலும் போக்க முடியும் என்று சொல்லுகிறார்.

## கிருபையும் விசுவாசமும்.

*எபே 2:8 **கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்;** இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;*

நாம் இரட்சிக்கப்பட்டது **' கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு '.** நாம் இரட்சிக்கப்பட்டது கிருபையினால் மாத்திரம் அல்ல. நாம் இரட்சிக்கப்பட்டது விசுவாசத்தினால் மாத்திரமும் அல்ல. ' கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு '. விசுவாச உலகத்தில் நீங்கள் அடிப்படையில் இரண்டு விதமான மக்களை பார்க்கலாம். ஒன்று **கிருபை பிரிவு.** இவர்கள் சொல்லுவது - தேவன் எல்லாவற்றையும் தன் கிருபையால் தந்திருக்கிறார், தருவார். நமது பங்கு ஒன்றும் இல்லை. எல்லாம் சரியாக நடக்கும்.

மற்ற பிரிவு - விசுவாச பிரிவு. இவர்கள் சொல்லுவது - எல்லாம் நம் விசுவாசத்தால் நடக்கும். நமது விசுவாசம் தேவனை அசைக்கும் என்று.

ஆனால் வேதாகம் சொல்லுவது இந்த இரண்டு தீவிர பிரிவுகளும் தவறு. வேதாகமக்கோட்பாடு ' கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு '. உதாரணத்துக்கு இரட்சிப்புக்கான தேவ கிருபையை எடுத்துக்கொள்வோம். தேவன் மரித்தது இரட்சிக்கப்படப்போகிற மக்களுக்காக மாத்திரம் அல்ல. சகல மக்களுக்காகவும். ( *1 யோவான் 2:2*).

*தீத் 2:11 ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி,*

தேவன் இரட்சிப்பை அளிக்கத்தக்க கிருபையை எல்லாருக்கும் அளித்தார். ஆனாலும் பலரும் இரட்சிக்கப்படவில்லையே ஏன்?. எனென்றால் தேவன் கிருபையாய் அளித்த இரட்சிப்பை பலரும் தங்களது விசுவாசத்தை உபயோகித்து பெற்றுக்கொள்ள வில்லை. அதனால் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை. விசுவாச வாழ்க்கையும் அது போலத்தான். தேவன் தன் கிருபையால் தந்திருக்கிற எதையும் நாம் விசுவாசத்தை உபயோகித்து பெற்றுக்கொள்ள முடியும். தேவன் தன் கிருபையால் தராத ஒன்றையும் நாம் எவ்வளவு விசுவாசத்தை உபயோகித்தும் பெற்றுக்கொள்ள முடியாது. தேவன் தன் கிருபையால் செழிப்பு, சுகமடைதல், பாதுகாவல், வல்லமை எல்லாம் தந்திருக்கிறார், நாம் விசுவாசத்தை உபயோகித்து அவற்றை பெற்றுக்கொள்கிறோம். ஒரு வெற்றி உள்ள விசுவாச வாழ்க்கைக்கு கிருபை மாத்திரம் போதாது, அல்லது விசுவாசம் மாத்திரம் போதாது, **கிருபையும் விசுவாசமும்** வேண்டும்.

## 4. ஈவு.

*எபே 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய **ஈவு;***

ஈவு என்பது ஒருவர், ஒன்றையும் எதிர்பார்க்காமல் தானாகவே முன்வந்து மற்றொருவருக்கு கொடுப்பது. இது ஒரு இலவசமான பரிசு. இலவசமாக கொடுக்கப்படுவது. ஒருவர் நமக்கு ஏதாவது ஒன்றை நமக்கு ஈவாக தரும்போது, இதற்கு என்ன விலை நான் கொடுக்க வேண்டும் ? என்று நாம் கேட்பதில்லை. ஒரு ஈவுக்கும், சம்பளத்துக்கும் உள்ள வேறுபாட்டை நாம் மனதிலாக்கிக்கொள்ள வேண்டும். சம்பளம் என்பது நாம் ஏதாவது ஒரு வேலை செய்து அதன் பிரதி பலனாக கொடுக்கப்படுவது. ஆனால் ஈவு அப்படி அல்ல. ஒரு ஈவை நாம் ஏதாவது வேலை செய்து சம்பாதித்துக்கொள்ள முடியாது. இரட்சிப்பு என்பது ஒரு ஈவு. ***ரோம 6:23*** *பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். ( 2 கொரி 9:15 )*

### நாம் எப்படி இரட்சிக்கப்படவில்லை ?

***எபே** 2:8 கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு*

*9 ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல;*

நாம் ஏதாவது செயல்களை செய்து இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது. அது போலவே நாம் ஏதாவது கிரியைகளை செய்து இரட்சிப்பை இழக்கவும் முடியாது *( எபே 2:9, ரோமர் 5:12,19 ).* இன்று பலரும் தவறாக இரட்சிப்பை சொல்லிக்கொடுக்கும்போது, " சகோதரா நீ இரட்சிக்கப்படுவதற்கு அதை செய்ய வேண்டும் இதை செய்ய வேண்டும், அதை செய்யக்கூடாது இதை செய்யக்கூடாது, அப்படி இருக்கவேண்டும் இப்படி இருக்க வேண்டும் " என்று தவறாக சொல்லிக்கொடுக்கிறார்கள். பலரும் இவ்விதமாகவே சில பழக்கங்களை விட்டு, சில காரியங்களை செய்து, அதனால் தாங்கள் இரட்சிக்கப்பட்டோம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இரட்சிக்கப்பட்ட பிறகும் பல காரியங்களை செய்து இரட்சிப்பின் வாழ்வை வாழலாம் என்றும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இரட்சிப்பு என்பது நாம் நம்முடைய சொந்த முயற்சிகளால் அல்லது நல்ல நியாயப்பிரமாணக்கிரியைகளினால் சம்பாதித்துக்கொள்வது அல்ல. கிரியைகளால் இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது என்று *எபே 2:8* திட்டவட்டமாக சொல்லுகிறது. மேலும் ***தீத் 3:5*** *நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.*

இந்த அடிப்படை உண்மை தெரியாமல் பலரும் இன்னும் **" கிரியை மனப்பாங்குடனேயே "** இருக்கிறார்கள். கிரியை மனப்பாங்குடன் ஒரு போதும் சந்தோஷமாக, தேவன் தந்திருக்கும் சுதந்திரத்தில் இருக்க முடியாது.

அது ஒரு பாரமாக எப்போதும் நம்மை அழுத்திக்கொண்டே இருக்கும். இன்னும், இன்னும் எதாவது செய்ய வேண்டும் என்று அதற்கு முடிவே இல்லாமல் இருக்கும். அந்த வாழ்க்கை உண்மையில் ஒரு சாட்சியான வாழ்க்கையாக இருக்காது.

அன்பு சகோதரா, சகோதரி. இந்த வேதபாடத்தின் மூலமாக நீங்கள் **" எப்படி இரட்சிக்கப்பட்டீர்கள் "** என்று தெரிந்து கொண்டீர்கள்.

***கொலோ 2:6*** *ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, 7 நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.*

நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டது, இரட்சிக்கப்பட்டது - **கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு**. அது தேவன் தந்த ஈவு. உங்களது மீதி வாழ்வையும் அப்படியே வாழுங்கள் **" கிருபையினால் விசுவாசத்தைக்கொண்டு, அது தேவனுடைய ஈவு ".** வல்லமையாக, சாட்சியாக வாழுங்கள். **நீங்கள் என்ன செய்கிறீர்கள், என்ன செய்யாமல் இருக்கிறீர்கள் என்பதன் அடிப்படையில் உங்கள் விசுவாச வாழ்வு இருக்கக்கூடாது**. அது ஒரு வல்லமையற்ற, எப்போதும் தோற்றுப்போன உணர்வு உள்ள வாழ்க்கையாக இருக்கும். **உங்கள் விசுவாச வாழ்வு இயேசு கிறிஸ்து உங்களுக்கு என்ன செய்திருக்கிறார், என்ன செய்யாமல் இருக்கிறார் என்பதன் அடிப்படையில் இருக்க வேண்டும்.** அடுத்த முறை சாத்தான் உங்களிடம் வந்து நீ அதை செய்ய வில்லை, இதை செய்தாய், அதனால் நீ நீதியை இழந்தாய், தேவன் உன்னை சிநேகிக்க மாட்டார் என்று சொல்லும்போது, நீங்கள் சொல்லுங்கள் " முட்டாளே! நீ சொல்வது சரி அல்ல. நான் நீதிமானாக இருப்பதும், தேவன் என் மேல் அன்பாக இருப்பதும், நான் என்ன செய்கிறேன், செய்ய வில்லை என்பதனால் அல்ல.... இயேசு எனக்காக என்ன செய்திருக்கிறார் என்பதனால். அதனால் உன் பொய்களை நான் ஏற்பதில்லை". **ஒரு வேளை இது வரை நீங்கள் இரட்சிக்கப்படாமல் இருந்தால், உடனே இரட்சிக்கப்படுங்கள்.** எமது **"இரட்சிப்பு"** என்னும் வேதபாடத்தை (Kindly see it in the Home page ) படித்து வசனங்களின் அடிப்படையில் இரட்சிக்கப்படுங்கள். இயேசுவின் வருகையில் ஆயத்தமாக இருங்கள். தேவனுடைய கிருபையை சொல்லி மற்றவர்களையும் இரட்சிப்புக்குள் நடத்துங்கள். தேவனுடைய கிருபையே எந்த மனிதனையும் நீதிமானாக்கும். ஒரு நல்ல வாழ்க்கை வாழ வைக்கும்.

***தீத் 2:11*** *ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க* ***தேவகிருபையானது*** *பிரசன்னமாகி,*

*12 நாம் அவபக்தியையும் லௌகிகஇச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி*

*13 நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி* ***நமக்குப்போதிக்கிறது.***

ஆமேன்.

-------------------------------------------